DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.31/2023**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | வெங்கடேஷ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | நரசிம்மன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025.
1 முதல் 3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, மஞ்சமேட்டில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டல் வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த 24.01.2023ம் தேதி இரவு 09.00 மணிக்கு எனது சித்தலவாய் விசாலாட்சி ஹோட்டலில் கவின் என்பவர் ஆப்லெட் பார்சல் வாங்கி சென்று விட்டார். பிறகு இரவு 10.15 மணிக்கு கவின் குமார் வாங்கிய பார்சலை இளையராஜா என்பவர் எடுத்து வந்தார் அவருடன் கவின், முத்துக்குமாரும் வந்தார்கள். இளையராஜா அந்த பார்சலில் மண்ணெண்ணெய் வாடை அடிக்கிறது என்று என்னிடம் கேட்டார். நான் எங்கள் ஹோட்டலில் மண்ணெண்ணெய் பயன்படுத்துவதில்லை என்று சொன்னேன்.

2. இளையராஜா என்பவர் என் கடையில் வாங்கியதை எப்படி இல்லை என்று சொல்வாய் என்று கூறி என்னை புண்டாமவனே என்று சொல்லி திட்டி கன்னத்தில் அறைந்தார். இளையராஜா கட்டையால் என்னை முதுகில் அடித்தார். எனது மாமா மணிகண்டன் என்பவர் தடுக்க வந்தார். கவின் பக்கத்து பெட்டிக் கடையில் இருந்த சோடா பாட்டிலை எடுத்து உடைத்து எனது மாமாவை குத்த வந்தார். முத்துக்குமார் என்பவர் கண்ணாடி பாட்டிலில் என்னையும், எனது மாமாவையும் தாக்கினார். கடையில் உள்ளவர்கள் என்னை வந்து தடுக்கவும் மூன்று பேரும் கிளம்பினார்கள். அப்போது இளையராஜா

என்பவர் என்னை பார்த்து சும்மா விட மாட்டேன் கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்தார். அன்று இரவு என்பதால் நான் மருத்துவமனை செல்லவில்லை.

3. காலையில் கோவக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்கை எடுத்து அங்கிருந்து கரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். கரூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். மாயனூர் போலீசார் வந்து என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனது மாமாவிற்கு காயம் ஏற்பட்டது. எனது மாமாவும் சிகிச்சை எடுத்துக் கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ எலக்ட்ரானிக் கம்யூனிகேசன் படித்துள்ளேன். என்னென்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறேன். பால் ஏஜென்ஸி வைத்து நடத்தி வருகிறேன். டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த தொழில் எல்லாம் நானும், எனது அப்பாவும், மாமாவும் சேர்ந்து தான் பார்த்துக் கொள்கிறேன் என்றால் சரிதான். சலுன் கடை நான் வைத்துள்ளேன் என்றால் என் கடையில் வேலை செய்யும் பையனுக்கு வைத்து கொடுத்துள்ளேன். அந்த கடை பெயர் வந்தால் வெட்டுவோம் என்று பெயர். அந்த பெயர் வைப்பதற்கு குட்வில் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். ஹோட்டல் அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். எப்போதும் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான்.

2. சித்தலவாயில் எங்கள் ஹோட்டல் பெரியல் ஹோட்டல் என்றால் விசாலட்சி என்ற பெயரில் ஹோட்டல் வைத்துள்ளோம். சாட்சிகள் மணிகண்டன், அமிர்தாநத்தம், ராஜகோபால், கௌதம் ஆகியோர்கள் உறவினர்கள் என்றால் சரியல்ல. மணிகண்டன், ராஜகோபால் மட்டும் உறவினர் மற்றவர்கள் தெரிந்தவர்கள். எங்கள் கடையில் CCTV கேமரா உள்ளதா என்றால் இந்த பிரச்சனை நடந்த பிறகு தான் வைத்தோம். தற்போது உள்ளது. பிரச்சனை நடந்ததாக சொன்னவுடன் உடனே மருத்துவமனை செல்லவில்லை என்றால் அப்போது உட்காயம் தான் உள்ளது இரவு நேரம் என்பதால் செல்லவில்லை. எனது மாமாவிற்கு ரத்த காயம் உள்ளது. எனது ஹோட்டலில் இருந்து

கோவக்குளம் அரசு மருத்துமனை 2 கி.மீ தூரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணராயபுரத்தில் தனியார் கிளினிக் உள்ளது என்றால் 24 மணி நேரம் கிடையாது.

3. எங்களது ஹோட்டல்–ஐ ஒட்டி காய்கறி கடைகள் உள்ளது என்றால் சரிதான். ஹோட்டலின் கிழக்குபுறம் பேக்கரி உள்ளது என்றால் சரிதான். இளையராஜா மண்ணெண்ணெய் வாடை அடிப்பதாக சொன்னதற்கு நான் மாற்றித்தர எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் அவர் சொன்னதே தவறு நாங்கள் ஹோட்டலில் மண்ணெண்ணெய் பயன்படுத்துவது கிடையாது. ஹோட்டலில் எதிர்புறம் ATM உள்ளது அதில் கேமரா உள்ளது என்றால் ATM ஹோட்டலில் நேர் எதிர்புறம் கிடையாது. மேற்கு தள்ளி உள்ளது. நான் சொன்னது போல் இளையராஜா என்னை அடிக்கவில்லை என்றாலும், நான் தான் இளையராஜாவை தாக்கினேன் என்றாலும் சரியல்ல.

4. இளையராஜாவை குடுக்கரதை வாங்கிட்டு போடா பள்ளபயலே என்று சாதியை சொல்லி திட்டினேன் என்றால் சரியல்ல. கீழே கிடந்த குச்சியை எடுத்து இளையராஜாவை நான் அடித்தேன் என்றால் அடித்து காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அடித்ததில் இளையராஜா அன்று இரவே கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததை நான் தெரிந்து கொண்டு மறுநாள் நானும், மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. இளையராஜாவை டிஸ்சார்ஜ் செய்ய சொல்லி அரசியல் கட்சி நபர்களை வைத்து பேசினேன் என்றால் சரியல்ல. அதனால் தான் இளையராஜா கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யாமல் நான் கொடுத்த புகார் மீது மட்டும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை.

5. என் மீது மாயனூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.34/2023 ன் படி வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதை எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பொய்யான வழக்கு என முடிக்க வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னை திட்டவோ, அடிக்கவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் நான் சத்தம் போட்டதை தடுத்து இளையராஜாவை அழைத்து மட்டும் தான் சென்றார்கள் என்றால் சரியல்ல. இளையராஜாவுக்கு ஆதரவாக இருப்பதால் 2, 3 எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஹோட்டலில் கேமரா இருந்து உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் பிரச்சனைக்கு பிறகு கேமரா வைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. 1 முதல் 3 எதிரிகள் என்னையும், எனது மாமாவையும் அடிக்கவுமில்லை கெட்ட வார்த்தையால் திட்டவும் இல்லை, கொலை மிரட்டல் விடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு அரசியல் செல்வாக்கு உள்ளதால் நான் கொடுத்த பொய்யான புகார் மீது போலீசார் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/−ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.